DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C No. 223/2020

Prosecution side witness for P.W. 14

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. கைலாசாபதி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.09.2025.**

A1 to A3 are present.

முதல்விசாரணை:–

நான் கடந்த 5 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளம் கடல்சார் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய காவலர் எண்.2317 ஆகும். கடந்த 08.07.2019 ஆம் தேதி நிலைய உதவி ஆய்வாளர் உத்தரவின்படி நிலைய குற்ற எண். 9/2019 Man missing வழக்கில் நிலையத்திலிருந்து புறப்பட்டு இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கம் கடல் காவல்நிலைய எல்கைக்குட்பட்ட தெற்கு நரிப்பையூர் கடற்கரை பகுதிக்கு சென்று இறந்த நிலையில் கடற்கரையில் கரை ஒதுங்கி கிடந்த ஒரு ஆண் சடலமான பெயர் அந்தோணி சின்னத்துரை என்பவரின் சடலத்தை தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக தூத்துக்குடி அரசுமருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு வந்து பிண பாதுகாப்பு அறையில் வைத்தேன். அதன்பிறகு 09.07.2019 அன்று நிலையத்திலிருந்து பிரேத பரிசோதனை செய்ய கடவுச்சீட்டு பெற்று அரசுமருத்துகல்லூரி மருத்துவமனை சென்று வழக்கில் இறந்துபோன அந்தோணி சின்னத்துரை என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்ய மருத்துவருக்கு அடையாளம் காட்டியும், பிரேத பரிசோதனை செய்யும்போது உடன் இருந்தும், பரிசோதனை முடிந்தபின்பு பிரேதத்தை செல்போனில் புகைப்படம் எடுத்தும், பிரேத பரிசோதனைக்கு பின்பு இறந்தவரின் சடலத்தை இறந்தவரின் மனைவி திருமதி. ரெஸ்லின்மேரி என்பவரிடம் ஒப்படைத்து ஒப்பம் பெற்றும், எடுத்த புகைப்படத்தை பார்க் ரிட்டல் கலர் ஸ்டுடியோவில் நகல் எடுத்தும் மேற்படி புகைப்படத்தை நிலையம் வசம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)

08.07.2019 அன்று காவல்நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டேன் என்றால் மாலை 5.00 மணி இருக்கும். யார் யாரெல்லாம் புறப்பட்டோம் என்றால் நானும், அவரது உறவினரும் சென்றோம். உறவினர்கள் யார் என்றால் உறவினர் பெயர் நினைவில்லை. தனித்தனியாக இருவரும் பைக்கில்தான் சென்றோம். நரிப்பையூர் சேரும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 7.00 மணி இருக்கும். அங்கிருந்து எந்த ஆம்புலன்சில் பிரேதத்தை கொண்டுவந்தேன் என்றால் தனியார் ஆம்புலன்ஸ் பெயர் நினைவில்லை. அந்த ஆம்புலன்ஸை நரிப்பையூருக்கு வரச்சொன்னது யார் என்றால் நாங்கள்தான் தொலைபேசியின் மூலம் வரச்சொன்னோம். குறிப்பாக அவரது உறவினர். கடற்கரையிலிருந்து பிரேதத்தை அரசுமருத்துவமனைக்கு கொண்டுவர யார் உத்தரவின்பேரில் எடுத்து வந்தோம் என்றால் உதவி ஆய்வாளர் உத்தரவின்பேரில் எடுத்து வந்தோம். உதவி ஆய்வாளர் அந்த கடற்கரைக்கு வந்து பார்வையிடவில்லை என்றால் சரிதான். அந்த கடற்கரையில் வைத்து சடலத்தை எந்தவொரு புகைப்படமும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சடலத்தை ஆம்புலன்சில் எத்தனை மணிக்கு ஏற்றினோம் என்றால் 7.00 மணிக்கு ஏற்றினோம். அந்த இடத்தில் எங்களை தவிர்த்து வேறு கடலோர காவல்துறையினரோ, வேறு எந்த காவலர்களும் அங்கு இல்லை என்றால் சரிதான். தூத்துக்குடி அரசுமருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு வந்தோம் என்றால் 8.00 மணி இருக்கும். பிணவறையில் வைக்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 8.30 மணி முதல் 9.00 மணி இருக்கும். பிணவறையில் சடலத்தை வைக்கும்போது கடலோர காவலர்களோ, காவல்துறையினரோ வந்தனரா என்றால் உதவி ஆய்வாளர் ஜானகிராமன் வந்திருந்தார். பிணவறையில் வைக்கும்போது புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 09.07.2019 அன்று பிரேத பரிசோதனைக்கான கடவுச்சீட்டை யாரிடமிருந்து பெற்றுக்கொண்டேன் என்றால் மேற்படி உதவி ஆய்வாளரிடமிருந்து பெற்றுக்கொண்டேன். யாருடைய உத்தரவின்பேரில் செல்போனில் புகைப்படம் எடுத்தேன் என்றால் மேற்படி உதவி ஆய்வாளர் உத்தரவின்படி புகைப்படம் எடுத்தேன். மேற்படி உதவி ஆய்வாளருக்கு பிரேத பரிசோதனையின்போது உடன் இருந்து உதவி செய்தேன் என்றால் சரிதான். சடலத்தை உறவினரிடம் யாருடைய உத்தரவின்பேரில் ஒப்படைத்தேன் என்றால் மேற்படி உதவி ஆய்வாளரின் உத்தரவின்பேரில் ஒப்படைத்தேன். சடலத்தை இறந்தவரின் மனைவியடம் ஒப்படைத்தாக சாட்சியம் சொல்லியுள்ளநிலையில் அவர்தான் இறந்தவரின் மனைவி என்று யார் சொல்லி தெரியவந்தது என்றால் மேற்படி உதவி ஆய்வாளர் சொல்லி தெரியவந்தது. புகைப்படத்தை நகல் எடுத்ததாக சொல்லும் கடைக்கு ஏற்கனவே வந்துள்ளேனா என்றால் இல்லை. அந்த கடையின் முகவரி தெரியுமா என்றால் தெரியாது. அது எந்த திசையில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னை கடலோர காவல்நிலைய ஆய்வாளரும், தாளமுத்து நகர் காவல்நிலைய ஆய்வாளரும் என்னை விசாரித்தார்கள். எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 09.07.2019 அன்று இருவரும் என்னை விசாரித்தார்கள். நான் சொன்ன

நாள், நேரத்தில் இறந்தவரின் சடலத்தை தெற்கு நரிப்பையூர் கடற்கரையிலிருந்து தனியார் ஆம்புலன்சில் அரசுமருத்துவமனைக்கு கொண்டுவந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கடவுச்சீட்டு பெற்று பிரேத பரிசோதனை செய்யும்போது உடன் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் புகைப்படம் எடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடவுச்சீட்டு பெற்றதாக சொல்வது பொய் என்றாலும், அவ்வாறு கடவுச்சீட்டு பெற்றிருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் நான் மேற்படி உதவி ஆய்வாளரிடம் கடவுச்சீட்டை கொடுத்தேன். நான் வழக்கில் உருவாக்கப்பட்ட சாட்சி என்றும், அதனால் ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>